இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“மறைக்கல்வி வகுப்புகளில் குறைந்து வரும் மாணவர்களின் எண்ணிக்கையில் கவனம் செலுத்துவதை விட, திருஅவைக்குள் ஒரு சொந்தம் என்ற உணர்வை வளர்ப்பது மிக முக்கியமானது” என்றும், “பங்கேற்பு குறைவாக இருந்தாலும் கூட, மறைக்கல்வி ஆசிரியர்கள் மனம் தளராமல் பணியாற்றுங்கள்” என்று ஊக்குவித்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

# மியான்மாரில் மோதல்களுக்கு மத்தியிலும் கல்விப் பணி!



கிறிஸ்தவக் கல்லூரி

மியான்மாரில் உள்நாட்டுப் போர் தொடங்கி ஐந்தாவது ஆண்டை நெருங்கியுள்ள நிலையில், அந்நாட்டின் கல்வித் துறை மிக மோசமான சரிவைச் சந்தித்துள்ளது. இந்தப் பாதிப்பால் 2021 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில் மட்டும் ஏறத்தாழ 50 லட்சம் மாணவர்கள் தங்கள் படிப்பை முடிக்க இயலவில்லை என்றும், இது அந்நாட்டின் கல்வி நெருக்கடியை எடுத்துக்காட்டுகிறது என்றும் பீதேஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜனவரி 10, சனிக்கிழமையன்று, புனித ஜோசப் கல்வியியல் கல்லூரி நடத்திய தனது ஐந்தாவது பட்டமளிப்பு விழாவில், 30 மாணவர்களுக்குப் பட்டங்களும் பட்டயங்களும் வழங்கப்பட்ட நிலையில், இந்தச் சாதனையை மீண்டெழும் திறனின் வெளிப்பாடு என்று குறிப்பிட்ட அக்கல்லூரியின் முதல்வர் ஜோசப் வின் ஹலைங் ஓ அவர்கள், போர்ச் சூழல், இடப்பெயர்வு மற்றும் பாதுகாப்பற்ற நிலை ஆகியவை மாணவர் சேர்க்கையை வெகுவாகக் குறைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், சாதாரணச் சூழல் நிலவியிருந்தால், இந்தப் பட்டமளிப்பு விழாவில்100-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இருந்திருப்பார்கள் என்றும் தனது கருத்தைப் பதிவு செய்தார்.

யங்கூன் மறைமாவட்டத்தின் துணை ஆயர் நோயல் சா நாவ் அய் (Noel Saw Naw Aye) அவர்கள், அருள்பணியாளர்கள் மற்றும் பொதுமக்களுக்கான இக்கல்லூரியின் கல்வித் திட்டங்களையும், மதங்களுக்கிடையேயான ஒத்துழைப்பையும் தனது உரையில் எடுத்துக்காட்டினார்.

சாதாரண குடிமக்கள், நடைமுறை சார்ந்த துறைகளுடன் இணைந்து இறையியலையும் படிப்பதற்கு இக்கல்லூரி வழங்கும் அரிய வாய்ப்பை மியான்மாரின் கெங்டங் மறைமாவட்டத்தின் ஆயர் ஜான் சா யா ஹான் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்.

தொடர் நெருக்கடிகளுக்கு மத்தியிலும், கல்வி வழியாக சமுதாயத்திற்குப் பணியாற்றும் தனது நோக்கத்தை இக்கல்லூரி மீண்டும் உறுதிப்படுத்தியுள்ள அதேவேளையில், இன்னல்களுக்கு இடையிலும் தங்கள் கல்வியைத் தொடர வாய்ப்பு கிடைத்ததற்காக பட்டதாரி மாணவர்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

ஜான்சி ராணி அருளாந்து - வத்திக்கான்

# ஆலயத்திற்கு வரும் எண்ணிக்கையை விட சொந்தம் என்ற உணர்வு முக்கியமானது!


திருத்தந்தை (ANSA)

“மறைக்கல்வி வகுப்புகளில் குறைந்து வரும் மாணவர்களின் எண்ணிக்கையில் கவனம் செலுத்துவதை விட, திருஅவைக்குள் ஒரு சொந்தம் என்ற உணர்வை வளர்ப்பது மிக முக்கியமானது” என்றும், “பங்கேற்பு குறைவாக இருந்தாலும் கூட, மறைக்கல்வி ஆசிரியர்கள் மனம் தளராமல் பணியாற்றுங்கள்” என்று ஊக்குவித்துள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

'புனித பேதுரு சதுக்கம்' (Piazza San Pietro) என்ற அமைதி பற்றிய ஒரு பத்திரிகையின் ஜனவரி மாத இதழில், லாஃபென்பர்க்கைச் சேர்ந்த 50 வயதான சுவிஸ் மறைக்கல்வி ஆசிரியர் நுன்சியாவுக்கு அளித்துள்ள பதில் மொழியில் இவ்வாறு கூறியுள்ளார் திருத்தந்தை.

குடும்பங்களையும் இளைஞர்களையும் பங்குத்தள நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதில் உள்ள சவால்களைக் குறித்தும், விளையாட்டு, விருந்துகள் மற்றும் நம்பிக்கையின் மீதான பொதுவான அலட்சியம் பெரும்பாலும் முன்னுரிமை பெறுவதாகவும், ஆலயங்கள் பெரும்பாலும் காலியாக இருப்பதாகவும் அல்லது முக்கியமாக வயதானவர்கள் மட்டுமே கலந்துகொள்வதாகவும் தனது வருத்தத்தையும் கவலையையும் நுன்சியா திருத்தந்தைக்கு எழுதியுள்ள நிலையில் அவருக்கு இந்தப் பதில்,மொழியைத் தந்துள்ளார் திருத்தந்தை.

முதலில் நுன்சியாவின் கவலைகளை ஒப்புக்கொண்டுள்ள திருத்தந்தை லியோ அவர்கள், “இந்த நிலைமை நீண்ட கிறிஸ்தவ மரபுகளைக் கொண்ட நாடுகளில் எதிர்கொள்ளும் சவால்களை வெளிப்படுத்துகிறது” என்று எடுத்துக்காட்டியுள்ளார்.

மேலும் “மறைக்கல்வி வகுப்புகளில் ஒரு சிலர் மட்டுமே பங்கேற்றாலும் கூட, மறைக்கல்விக்கு அர்ப்பணிக்கப்பட்ட மணிநேரங்கள் ஒருபோதும் வீணாகாது” என்று குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, “பங்கேற்பவர்களைப் புள்ளிவிவரங்களுக்கு அப்பால் பாருங்கள்” என்றும் மறைக்கல்வி ஆசிரியர்களை வலியுறுத்தியுள்ளார்.

“பிரச்சனை எண்களில் இல்லை, ஆனால் மக்கள் தாங்கள் திருஅவையின் ஓர் அங்கம் அதாவது, கிறிஸ்துவின் திருவுடலின் செயல்பாடுள்ள உறுப்பினர்கள் என்பதை உணரவில்லை” என்றும், “அருளடையாளங்களைப் பயன்படுத்துவதன் வழியாக செயல்படுவதற்குத் தயாராக இல்லை” என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை.

இதேபோன்ற சூழ்நிலைகளில் நுன்சியா மற்றும் பிற மறைக்கல்வி ஆசிரியர்களையும் ஊக்குவித்துள்ள திருத்தந்தை, தொடர்ச்சியான மனமாற்றம் மற்றும் கூட்டுப் புதுப்பித்தலின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளதுடன், ”உண்மையான விசுவாசக் கதவாகிய கிறிஸ்துவின் இதயம், எப்போதும் திறந்திருக்கும்” என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்தியுள்ளார்.

”கிறிஸ்துவின் நற்செய்தியின் மகிழ்ச்சி, மறுபிறப்பு மற்றும் உயிர்த்தெழுதலின் மகிழ்ச்சிக்கு” சான்றுபகர கிறிஸ்தவர்களுக்கு அழைப்பு விடுத்த திருத்தந்தை புனித ஆறாம் பவுல் அவர்களின் வார்த்தைகளை எடுத்துக்காட்டி தனது பதில்மொழியை நிறைவுசெய்துள்ளார் திருத்தந்தை.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# வெனிசுலா நோபல் பரிசு பெற்ற மச்சாடோவுடன் திருத்தந்தை சந்திப்பு


திருத்தந்தையுடன் வெனிசுலா நோபல் பரிசு பெற்ற மச்சாடோ (ANSA)

இந்தச் சந்திப்பின்போது, அனைத்துலகச் சமூகமும் வெனிசுலா தலைவர்களும் மக்களின் விருப்பத்திற்கு மதிப்பளிக்கவும், வலுக்குறைந்தவர்களைப் பாதுகாக்கவும், பல ஆண்டு நெருக்கடிக்குப் பிறகு அமைதியான, அரசியல் நிலை மாற்றத்தை (மக்களாட்சி) நோக்கி பாடுபடவும் மரியா கொரினா மச்சாடோவிடம் வலியுறுத்தினார் திருத்தந்தை.

கடந்த 2025 ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்ற, வெனிசுலா அரசியல்வாதியும் மனித உரிமை ஆர்வலருமான மரியா கொரினா மச்சாடோவை திருப்பீடத்தில் சந்தித்து உரையாடினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

அமெரிக்க இராணுவ நடவடிக்கையின் போது வெனிசுலாவின் முன்னாள் அரசுத் தலைவர் நிக்கோலஸ் மதுரோ அவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அந்நாட்டில் நிலவி வரும் பெரும் அரசியல் எழுச்சிகளுக்கு மத்தியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

மதுரோவின் நீண்டகால எதிர்ப்பாளரும் வென்டே வெனிசுலா கட்சியின் தலைவருமான மச்சாடோ அவர்கள் நாடுகடத்தப்பட்டு வாழ்ந்து வருகிறார். இப்போது அமெரிக்க அரசுத் தலைவர் டொனால்ட் டிரம்ப் உட்பட அனைத்துலகத் தலைவர்களுடன் சந்திப்புகளில் ஈடுபட்டு வருகிறார்.

இந்த உரையாடலின்போது, வெனிசுலாவின் நிலைமை குறித்து பலமுறை தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்திய திருத்தந்தை, வன்முறையை விடுத்து, மனித மற்றும் சிவில் உரிமைகள், நீதி, அமைதி மற்றும் தேசிய இறையாண்மையை மதிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

அனைத்துலகச் சமூகமும் வெனிசுலா தலைவர்களும் மக்களின் விருப்பத்திற்கு மதிப்பளிக்கவும், வலுக்குறைந்தவர்களைப் பாதுகாக்கவும், பல ஆண்டு நெருக்கடிக்குப் பிறகு அமைதியான, அரசியல் நிலை மாற்றத்தை (மக்களாட்சி) நோக்கி பாடுபடவும் அவரிடம் வலியுறுத்தினார் திருத்தந்தை.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# இந்தியத் திருஅவையின் வரலாற்றில் ஒரு மைல்கல்: புனித தேவசகாயம் பொதுநிலையினரின் பாதுகாவலராக அறிவிப்பு

இந்தியத் திருஅவைக்கு இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தருணமாகும். புனித தேவசகாயம் பிள்ளை அவர்கள் 'பொதுநிலையினரின் பாதுகாவலராக' (Patron Saint of the Laity) அறிவிக்கப்பட்டுள்ளார். இதற்கான ஆணையை ஜூலை 2025-இல் திருத்தந்தை லியோ XIV உறுதி செய்தார். இதற்கான அதிகாரப்பூர்வ விழா, அவர் மறைசாட்சியாக மரித்த தினமான 2026 ஜனவரி 14 அன்று, கோட்டாறு மறைமாவட்டத்தில் உள்ள தேவசகாயம் மவுண்டில் (Devasahayam Mount) நடைபெற்றது. 1752-ஆம் ஆண்டு இதே நாளில்தான் அவர் தனது விசுவாசத்திற்காக உயிர் துறந்தார்.

வாழ்க்கை வரலாறு: 1712-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நீலகண்டன் என்ற பெயரில் பிறந்த இவர், திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மாவின் அரண்மனையில் உயர் அதிகாரியாகப் பணியாற்றினார். 1741-ல் ஒரு டச்சு கப்பல் தலைவரைச் சந்தித்தபோது, அவர் போதித்த நற்செய்தி, சமத்துவம் மற்றும் கடவுளின் அன்பு ஆகியவை நீலகண்டனின் வாழ்க்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. இதனால் ஈர்க்கப்பட்ட அவர், 1745-ல் கிறிஸ்துவத்தைத் தழுவி, "தேவசகாயம்" (கடவுள் என் உதவி) என்ற பெயரை ஏற்றார். அவரது மனைவியும் அவரைப் பின்தொடர்ந்து கிறிஸ்துவத்தை ஏற்றார்.

சோதனையும் தியாகமும்: 18-ஆம் நூற்றாண்டில் மதம் மாறுவது என்பது வெறும் ஆன்மீக முடிவு மட்டுமல்ல; அது ஆழமாக வேரூன்றியிருந்த ஜாதி ஆதிக்கத்தை எதிர்ப்பதாகவும் இருந்தது. கிறிஸ்துவத்தை ஏற்றதன் மூலம், தேவசகாயம் தனது சமூக அந்தஸ்தைத் துறந்து, சமத்துவத்தைப் போதித்தார். இது அரசவைக்குக் கோபத்தை ஏற்படுத்தியது. 1749-ல் அவர் மீது தேசத் துரோகக் குற்றம் சுமத்தப்பட்டது. மூன்று ஆண்டுகள் சிறைவாசம், சித்திரவதை மற்றும் பொது இடத்தில் அவமானம் ஆகியவற்றை அனுபவித்தார். ஆயினும் அவர் உறுதியாக இருந்தார்; தன்னைத் துன்புறுத்தியவர்களை மன்னித்தார், சக கைதிகளுக்கு ஆறுதல் கூறினார். இறுதியாக, 1752 ஜனவரி 14 அன்று, ஆரல்வாய்மொழியில் தனது 40-வது வயதில் தூக்கிலிடப்பட்டார். விசுவாசம் மற்றும் துணிச்சலின் அடையாளமாக அவர் மறைந்தார்.

புனிதர் நிலைக்கு உயர்வு: அவர் புனிதர் நிலையை அடையப் பல நூற்றாண்டுகள் ஆயின. 2012-ஆம் ஆண்டு திருத்தந்தை 16-ம் பெனடிக்ட் அவரை "விசுவாசமுள்ள பொதுநிலையினர்" என்று கூறி அருளாளராக உயர்த்தினார். 2022-ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவருக்குப் புனிதர் பட்டம் வழங்கினார். புனிதத்துவம் என்பது குருக்களுக்கோ அல்லது துறவிகளுக்கோ மட்டும் உரியதல்ல, மாறாக அன்பான சேவை மற்றும் சுயநலமற்ற அர்ப்பணிப்பு மூலம் எவரும் அதை அடைய முடியும் என்பதற்குத் தேவசகாயத்தின் வாழ்வே சான்று என்று திருத்தந்தை பிரான்சிஸ் புகழ்ந்தார்.

பொதுநிலையினரின் பாதுகாவலர்: இப்போது, பொதுநிலையினரின் பாதுகாவலராக அவர் அறிவிக்கப்பட்டிருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

- இது பொதுநிலையினரின் அழைப்பை அங்கீகரிக்கிறது.
- சாதிப் பாகுபாடுகளுக்குச் சவால் விடுகிறது.
- திருஅவையில் அனைவரையும் அரவணைக்கும் பண்பை ஊக்குவிக்கிறது.
- துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர்களுக்கு அவர் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறார்.
- நற்செய்தி அறிவிப்பில் பொதுநிலையினர் வெறும் பார்வையாளர்கள் அல்ல, மாறாகச் செயல்வீரர்கள் என்பதை அவர் நினைவூட்டுகிறார்.

கோட்டாறு மறைமாவட்ட ஆயர் நசரேன் சூசை அவர்கள் கூறுகையில், "புனித தேவசகாயம் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறார். துன்புறுத்தல்களுக்கு மத்தியில் அவர் காட்டிய துணிச்சல், இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலும் உள்ள விசுவாசிகளுக்கு உத்வேகம் அளிக்கிறது," என்றார்.


இன்றைய காலத்து பொதுநிலையினருக்கு, புனித தேவசகாயம் "அன்றாட வாழ்வில் புனிதத்துவம்" (holiness in the daily-ness) என்பதற்கு உதாரணமாகத் திகழ்கிறார். அதாவது, உணவு சமைப்பது, நீதிக்காகக் குரல் கொடுப்பது, பிரச்சனைகளை நேர்மையாகத் தீர்ப்பது, மற்றும் ஒவ்வொரு செயலிலும் கடவுளுக்கு முதலிடம் கொடுப்பது போன்ற எளிய செயல்களில் புனிதத்தைக் காண அவர் அழைக்கிறார். அரண்மனை அதிகாரியாக இருந்து மறைசாட்சியாக மாறிய அவரது பயணம், சாதாரண விசுவாசிகள் அசாதாரண விசுவாசத்துடன் வாழவும், சுவர்களை எழுப்பாமல் பாலங்களை அமைக்கவும், செயலில் கடவுளின் அன்பைச் சான்று பகரவும் அழைப்பு விடுக்கிறது.

அவரது வாழ்வு மற்றும் பரிந்துரை வழியாக, திருஅவையானது பொதுநிலையினரைத் துணிச்சலோடு விசுவாசத்தைக் கடைப்பிடிக்கவும், சுயநலமின்றி சேவை செய்யவும், அன்றாட வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் புனிதத்தை அடைய முடியும் என்பதை உணரவும் அழைக்கிறது.

அருட்பணி டாக்டர் மெர்லின் ரஞ்சித் அம்புரோஸ் DCL

# இறைவார்த்தை ஞாயிறு (ஜனவரி 25, 2026)

## கிறிஸ்துவின் வார்த்தை உங்களுள் குடிகொள்வதாக




ஜனவரி 25-ஆம் தேதி கொண்டாடப்படவுள்ள ஏழாவது 'இறைவார்த்தை ஞாயிறு'க்கான விவிலியக் கருப்பொருள், புனித பவுல் கொலோசையர் மக்களுக்கு எழுதிய திருமுகத்திலிருந்து எடுக்கப்பட்டது: "கிறிஸ்துவின் வார்த்தை உங்களுள் நிறைவாகக் குடிகொள்வதாக" (கொலோ 3:16). இறைவார்த்தையை வெறுமனே கேட்பதோடோ அல்லது படிப்பதோடோ நின்றுவிடாமல், அது தங்களுக்குள் ஆழமாக வேரூன்ற அனுமதிக்க வேண்டும். அது தங்கள் வாழ்வை வடிவமைத்து, கிறிஸ்தவச் சமூகத்தை நற்செய்திப் பணியில் ஒன்றிணைக்க வேண்டும்.

புனித ஆண்டிற்குப் பிறகு திருஅவைக்குப் கிடைத்த ஒரு நிலையான கொடையாக இக்கருப்பொருள் அமைகிறது. உண்மையான புதுப்பித்தல் என்பது நற்செய்தியைக் கவனமுடன் கேட்பதிலிருந்தே ஊற்றெடுக்கிறது என்பதை விசுவாசிகளுக்கு நினைவூட்டுகிறது. இறைவார்த்தையை இதயத்தில் வரவேற்கும்போது, அது தனிப்பட்ட மாற்றத்தையும், நற்செய்தி அறிவிப்பையும் கனிகளாகத் தருகிறது. ஏனெனில், "உள்ளத்தின் நிறைவையே வாய் பேசும்" (மத்தேயு 12:34).

இந்த ஆண்டின் கொண்டாட்டம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஏனெனில் இது புனித பவுலின் மனமாற்ற விழாவோடும், கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தின் நிறைவோடும் இணைந்து வருகிறது. இறைவார்த்தையானது வாழ்வை மாற்றியமைக்கும் வல்லமை கொண்டது என்பதையும், அனைத்து மக்களிடையேயும் திருஅவையின் பணியைப் புதுப்பிக்கிறது என்பதையும் இது எடுத்துக்காட்டுகிறது.

### மேய்ப்புப்பணிப் பரிந்துரைகள்

1. இறைவார்த்தைக்குத் திறந்த மனதுடன் இருக்க, தனிப்பட்ட மற்றும் சமூக இறைவேண்டலுடன் இது தொடங்க வேண்டும்.
   * முந்தைய வாரத்தில், இறைமக்கள் மன்றாட்டில் இதற்கென ஒரு சிறப்பு வேண்டுதலைச் சேர்த்தல்.
   * இக்கொண்டாட்டத்திற்காக நற்கருணை ஆராதனைக்கு ஏற்பாடு செய்தல்.
   * விவிலியம் குறித்த மறைக்கல்வி அல்லது விளக்கவுரை வழங்குதல்.
2. இறைவார்த்தை ஞாயிறைக் கொண்டாடுதல்

   இந்த ஞாயிறு ஆடம்பரமாகக் கொண்டாடப்பட வேண்டும்.
   * முக்கிய நடைமுறைகள்:
   * திருப்பலியின் போது விவிலியத்தை பவனியாகக் கொண்டு வந்து, அதற்குரிய இடத்தில் வைத்து மரியாதை செய்தல் (Enthronement).
   * வாசகங்களை வாசிப்பதற்கும், மறையுரையில் அதன் அர்த்தத்தை விளக்குவதற்கும் முக்கியத்துவம் அளித்தல்.
   * தினமும் விவிலியம் வாசிப்பதையும், இறைவார்த்தைத் தியானத்தையும் (Lectio Divina) ஊக்குவிக்கும் வகையில் விவிலியம் அல்லது நற்செய்தி நூல்களை விநியோகித்தல்.
   * இறைமக்கள் மன்றாட்டில் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான ஜெபங்களைச் சேர்த்தல்.
3. ஆண்டு முழுவதும் கடைபிடித்தல்

   இறைவார்த்தை ஞாயிறு என்பது ஒரு நாள் கொண்டாட்டம் மட்டுமல்ல; அது வாழ்நாள் முழுவதும் இறைவார்த்தையுடனான உறவைத் தொடரத் தூண்டுதலாக இருக்க வேண்டும்.
   * தொடர் முயற்சிகள்:
   * வாசகர்களுக்கு முறையான பயிற்சியும் உருவாக்கமும் அளித்தல்.
   * பைபிள் செயலிகள் (Bible Apps) மூலமாக இறைவார்த்தையைத் தினமும் எடுத்துச் செல்ல விசுவாசிகளை ஊக்குவித்தல்.
   * பங்குகளில் விவிலியக் குழுக்கள் மற்றும் இறைவார்த்தைத் தியான (Lectio Divina) அமர்வுகளை ஏற்பாடு செய்தல்.
   * நற்செய்தியை மையமாகக் கொண்ட ஜெபமாலை தியானம் போன்ற விவிலியம் சார்ந்த இறைவேண்டல் முறைகளை ஊக்குவித்தல்.

# ஆண்டின் பொதுக்காலம் 3ஆம் ஞாயிறு

**ஏசா 8:23-9:3, 1கொரி 1:10-13,17, மத் 4:12-23**

## அழைப்பை ஏற்போம்.

இன்று கத்தோலிக்க திருஅவை, ஆண்டின் பொதுக்காலத்தில் மூன்றாம் ஞாயிறைக் கொண்டாடுகிறது.

இரண்டாம் வாசகத்தில் ஒற்றுமையாக வாழ்தலைக் குறித்து பவுல் விவரிகிறார். நாம் ஒருவர் ஒருவரை மதித்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். பிறரை நமது வார்த்தைகளால் குற்றுயிராய் நோகச் செய்யும் பொழுதும் தரக்குறைவாக நடத்தும் பொழுதும் கிறிஸ்து இவ்வாறா பிளவு பட்டுள்ளார் எனும் வினாவைக் கேட்பது நமக்கும் பொருந்தும்.

நற்செய்தியில் இயேசுவின் பணிவாழ்வு துவங்கிவிட்டது. நெருங்கிவிட்ட இறையாட்சியை அனுபவிப்பதற்கு மனம் மாற வேண்டும் எனும் அழைப்போடு துவங்குகிறது.

தான் மட்டும் இறையாட்சியைக் கொண்டாட முடியாது. எனவே, இந்த சீடத்துவத்தை ஆழப்படுத்த வேலையாட்களைத் தேர்ந்து கொள்கிறார். அழைத்து அறுவடைக்குத் தயார் படுத்துகிறார்.

முதல் சீடர்களைக் கண்டறிகின்றார். என்னைப் பின் செல் என்றவுடனேயே அனைத்தையும் விட்டுவிட்டு அவர்கள் பின் தொடர்கின்றனர்.

ஆம், தங்கள் குடும்பம், சகோதர சகோதரிகள், உற்றார் உறவினர்கள் மட்டுமல்ல தான் சேகரித்து வைத்த சொத்துகள், சுகங்கள் அனைத்தையும் விட்டு விட்டு அவர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்களது வாழ்வின் வழிகாட்டியாய் ஏற்றுக்கொண்டு, பின் தொடர்கின்றனர்.

இறையரசைக் கட்டியெழுப்ப அனைவருக்கும் அழைப்பு கொடுக்கப்படுகிறது. புகழ் உச்சியில் இருக்கும் நடிகர், பாடகர், மாடு மேய்த்துக் கொண்டிருந்தவர், நீதிபதியாக இருந்தவர் ஆகியோருக்கு அழைப்பு கொடுக்கப்பட்டது. முழு மனதுடன் அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

இப்படியாக பல சூழ்நிலைகளில் இருந்தவர்கள் இறையரசைக் கட்டி எழுப்ப அழைக்கப்பட்டார்கள். இறக்கும்வரை சீடத்துவத்திற்கு சாட்சியம் அளித்துள்ளார்கள்.

தங்கள் வாழ்விலே இயேசுவை முழுமையாக ஏற்றுக்கொண்டார்கள். இயேசு காட்டும் பாதையிலே நடப்பதற்கு தயாரானார்கள். தங்களை முழுமையாக அர்ப்பணித்தார்கள். வாழ்வின் குருவான இயேசுவின் மீது பற்றுறுதிக் கொண்டார்கள். அதே இயேசு நம்மையும் அழைக்கிறார்.

நேரிடையாக அழைக்காது, பெற்றோர் மூலமாக, மூப்பர் மூலமாக, அருள்பணியாளர் மூலமாக, வாசகத்தின் மூலமாகக் கூட அழைக்கலாம். அந்த சிறுங்குரலைச் செவிமெடுத்து, அழைப்புக்கு பதில் கொடுப்போம்.

நமது ஆசைகளுக்கு அளவேயில்லை. அதே போல நமது எதிர்பார்ப்புகளுக்கும் எல்லை இல்லை. இவைகள் நம்மோடு பிணைக்கப்பட்டு இவ்வுலகைச் சார்ந்துள்ளது எனலாம். இதிலிருந்து விடுபட்டு, மனமாற்றம் அடைந்து, விண்ணுலகைச் சார்ந்து வாழ அழைக்கப்படுகிறோம்.

அழைப்பு என்பது அருள்பணியாளராகவோ, துறவற சகோதரியாகவோ, பெற்றோராகவோ, இளைஞராகவோ எத்தரப்பினராகவோ இருக்கலாம். அது இறைவனோடு ஒன்றித்து வாழும், கிறிஸ்து வாழ்வாக அமைய இறை அழைப்பை முழுமையாக ஏற்று சீடத்துவ வாழ்க்கையாக அமைய பயணித்திடுவோம். அருள்பெறுவோம். அழைப்பை ஏற்போம்.

ஆ.வி.டேவிட்.

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.